**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.9/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | உமாமகேஸ்வரி | த–பெ /க.பெ. | பழனியப்பன் |
| ஊர்: | : | கோட்டையூர் | சமயம்: | |
| வயது: | : | 40/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026**

----------------------------------------------------------------------------------------------------

**21.05.2026**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1) வாட்ஸ்அப் குரூப்பில் ரூ.4,00,000/– மட்டும்தான் எதிரி பெற்றார் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பாக என்ன தொகை என்று நினைவில்லை. 04.02.2023 ல் நான் குரூப் கிரியேட் செய்து அந்த தேதியிலேயே எதிரி எனக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். **(04.02.2023 ல் தொடங்கிய வாட்ஸ் அப் குரூப் பரிவர்த்தனைகளின் போட்டோ காப்பி எண்ணிக்கை 12 மற்றும் 63 BSA சான்றிதழ் எ.ம.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது.** ) எ.ம.சா.ஆ.1 ஆவணத்தின் 6 வது பக்கத்தில் உள்ள 11 வது புகைப்படத்தில் 2 நிரப்பாத காசோலைகள் எதிரிகொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான் அதில் ஒரு காசோலை நான் நிரப்பி தற்போதைய வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2 காசோலைகள் மட்டும்தான் எதிரி கொடுத்ததாக எ.ம.சா.ஆ.1 ல் கூறியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் மற்றொரு காசோலை ரூ.6,00,000/– என நிரப்பி கொடுத்துள்ளார். 05.05.2022 எதிரியின் பிறந்த

நாள் அன்று நான் எதிரியை சந்தித்தேன் என்றாலும், அப்போது எதிரி அவரது வாகனத்தில் வீட்டுக்கடன் பெறுவதற்காக வைத்திருந்த சொத்து ஆவணம் மற்றும் காசோலை புத்தகத்தை நான் திருடினேன் என்றாலும் அதில் ஒரு காசோலைதான் சி.சி. 53/2023 காசோலை என்றாலும் சரியல்ல, நான் எதிரியின் நிரப்பப்படாத காசோலையை வைத்திருக்கும்பட்சத்தில் திருடுவதற்கு எந்த ஒரு அவசியமும் இல்லை. சி.சி. 53/2023 வழக்கிற்காக காசோலைக்காக வெற்றுதாளை எனக்கு அறிவிப்பாக அனுப்பிவிட்டு வேறு ஒரு அறிவிப்பை அந்த வழக்கு அறிவிப்பாக அனுப்பினேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் மூலமாக நான் வழக்கறிஞர் மூலமாக அனுப்பி அறிவிப்பு அனைத்தும் திருப்பப்பட்டது, அதனால் எனது பெயரில் அறிவிப்பு அனுப்பினேன், அதை பெற்றார்.

**2)** தற்போதைய புகார் தாக்கல் செய்வதற்கு முன்பு 09.01.2023 ல் ம.சா.ஆ.1 காசோலையை திருப்பி தரும்படி கேட்டு எதிரி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல, நான்தான் 2022 டிசம்பரில் எதிரி மீது ASP –யிடம் புகார் கொடுத்தேன். தற்போதைய வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 09.01.2023 ல் எதிரி என் மீது புகார் கொடுத்து FIR பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் வழக்கு என் மீது இல்லை என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் ஆணையிட்டது. **( 30.10.2023 உடைய FIR ல் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது)** எ.ம.சா.ஆ.2 ற்கு நான் முன்பிணை பெற்றேன் என்றால் சரியல்ல. எனது பெயருக்கு வேறு நபர் பெற்றார். கணவரின் பெயர் தவறாக இருந்ததால் நான் எந்த ஒரு முன்பிணை மனுவும் பெற முன்வரவில்லை. **(முன்பிணை தொடர்பான மனு ஆணை எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** எ.ம.சாஆ.3 மனுவில் நான் கையொப்பம் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் **(ஆவணத்தை பார்த்து எனத கையொப்பம் என்று சாட்சி ஒப்புக்கொள்கிறார்)** நான் முன்பிணை பெறுவதற்கு எந்த ஒரு மனுவும் தாக்கல் செய்யவில்லை. எ.ம.சா.ஆ.2 முதல் தகவல்அறிக்கைக்காக எதிரியை பழிவாங்குவதற்காக காரைக்குடியில் எதிரி மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல, 2022 டிசம்பரிலேயே அவர் மீது நான் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி எதிரி எழுதிக்கொடுத்துள்ளார்.

3) காரைக்குடி காவல் நிலையத்தில் இருந்து எதிரிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். 19.01.2023 ல் பணம் பரிவர்த்தனை தொடர்பாக எழுத்து பூர்வமான நானும் எதிரியும் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரியல்ல. ASP அலுவலகத்தில் வைத்து 31.12.2022 ல் எதிரி எழுதிக்கொடுத்துள்ளார். 27.02.2023 ல் எதிரி மீண்டும் காவல் நிலையத்தில்இருந்து அழைத்து அதற்கு மீண்டும் ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான், ஆனால் தேதி நினைவில்லை. அப்போது வங்கி பரிவர்த்தனை, ஆடியோ, அறிவிப்பு, எதிரி விசாரணையின்போது சமர்பித்தார் என்றால் சரிதான், நானும் எனது தரப்பு ஆவணங்களை சமர்பித்தேன். பணம் தொடர்பான பிரச்சனை என்பதால் நீதிமன்றம் செல்லும்படி எதிரி கூறினார். காவல் நிலையத்தில் உள்ள விசாரணை முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான்.

4) **( காவல் நிலையத்தில் உள்ள விசாரணை தொடர்பாக பதிவுகளில் 46 பக்கங்கள் உண்மைநகல் எ.ம.சா.ஆ. 4 ஆக குறியிடப்படுகிறது.) ( ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** எந்த ஒரு பண நிலுவையும் இல்லை என்று காவலர்கள் அறிக்கை எ.ம.சா.ஆ.4 ல் இறுதிப்பக்கத்தில் கொடுத்துள்ளார்கள் என்றால் பொய்யாக அவ்வாறு அறிக்கை கொடுக்கப்பட்டது. நான் விசாரணை செய்த அதிகாரி மீது CM செல்லில் புகார் கொடுத்திருந்தேன். அதற்காக விசாரணை அதிகாரி எனக்கு எதிராக அறிக்கை செய்துள்ளார். CM செல்லில் கொடுத்த புகார் தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்க முடியுமா என்றால் சமர்பிக்கமுடியும்.

5) தற்போதைய காசோலை வழக்கு 2 மாதம் காலதாமதமாகத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், Delay மனு தாக்கல் செய்து அனுமதி பெறாததால் வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலை wrongly delivered not drawn on us என்று திருப்பப்பட்டதால் காசோலை வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல, வங்கியில் கேட்டபோது கணக்கு முடிக்கப்பட்டிருந்தால் அவ்வாறு வரும் என்று கூறினார். சி.சி. 53/2023 உள்ள புகாரில் குறைவான வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் என் சகோதரருக்கு கொடுத்துள்ளேன். நான் தற்போதைய வழக்கு தாக்கல் செய்வதற்கு

முன்பு எதிரிக்கு அனுப்பியுள்ள அறிவிப்பு நகல்களை நான் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும், வழக்கறிஞர் வைத்து அனுப்பியுள்ளேன், மற்றும் சட்ட உதவி மையம் மூலமாகவும் அனுப்பியுள்ளேன். அறிவிப்பை சமர்பிக்க தயாராக உள்ளேன். எதிரி எனக்கு பணம் கொடுத்திருந்தார் என்றாலும்,அதை திருப்பி கேட்ககூடாது என்பதற்காக நான் அவர் மீது பொய்யாக காசோலை வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு காசோலை செக்யூரிட்டிக்காக கொடுத்தார் என்றாலும், சட்டப்படியான கடனுக்கு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வாட்ஸ்அப் குரூப்பில் காசோலை செக்யூரிட்டிக்காத்தான் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே எனது காசோலை புத்தகத்தை திருடி அதற்கு பொய்யாக காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மீண்டும் நான் வைத்துள்ள எதிரியின் காசோலையை பயன்படுத்தி மீண்டும் வழக்கு தாக்கல் செய்வேன் என்றால் சரியல்ல. நான் எதிரியின் 15 காசோலைகள் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல, தற்போதைய வழக்கில் ஒன்று, சி.சி. 53/2023 ல் ஒரு காசோலை மற்றும் நான் ஒரு காசோலை வைத்துள்ளேன். ஆகமொத்தம் 3 காசோலைகள் மட்டுமே.ஒரு நபருடன் நன்கு பழகி அவரிடம் காசோலை பெற்று அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்வது எனது வழக்கம் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.21 17:54:35 +05'30'

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.